அரசு அலுவலர்களோடு ஆய்வு செய்து, அவற்றில் திரும்பவும் விளக்கங்கள் கேட்கப்பட்டு, உரிய வகையில் எளிமையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

134—

கோளரங்கம்

***12317—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதியில் கோளரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி அமைந்திருக்கும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அண்ணா அறிவியல் மையம் (கோளரங்கம்) தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மேற்கண்ட அறிவியல் மையத்திற்குச் சென்று பயனடைந்து வருகின்றனர். எனவே, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதியில் அறிவியல் கோளரங்கம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்றாண்டு, தகவல் தொழில்நுட்ப நூற்றாண்டாக வளர்ச்சியடைந்துள்ளது. கோளரங்கம் என்பது*

2022 ஏப்ரல் 20]

விண்வெளி பற்றிய சுவாரசியமான பயனுள்ள விஷயங்களை கண்களால் பார்த்து கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கிறது. பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு எளிமையான முறையில் அறிவியல் கல்வியைக் கொண்டுபோக வாய்ப்பாக இது அமையும்; தகுதிவாய்ந்த நிபுணர்களின் பயிற்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றது. டிஜிட்டல் தொழில்நுட்ப உதவியுடன் பூமிப் பந்தின் வடிவத்திற்குள் பிரபஞ்சத்தையே உள்ளடக்கிப் பார்க்கும் வாய்ப்பு கிராமப்புறத்தின் கடைக்கோடி மனிதனுக்கும் இதன்மூலம் கிடைத்திடும். எதிர்கால தமிழகம் நாத்திகத்தின் கருத்தியலை, இயக்கவியல் பார்வையோடு அணுகவும், மாணவர்களுக்கு அறிவியல் தொழில்நுட்பத்திறனை வளர்த்திட தொலைநோக்கு வாய்ப்பாகவும், புதுக்கோட்டை மாவட்டத்தில் கோளரங்கத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. எங்களுக்கு அதிலே எதிர்ப்பு இல்லை. ஆனால், இன்று தமிழகத்திலே 4 கோளரங்கங்கள் இருக்கின்றன. ஒன்று, இங்கே சென்னையில் அண்ணா படிப்பகத்திற்கு முன்பாக இருக்கிற பெரியார் கோளரங்கம்; மற்றொன்று, திருச்சிராப்பள்ளியிலே அண்ணா அறிவியல் கோளரங்கம்; மாவட்ட அறிவியல் மையம் வேலூரில் ஒன்று இருக்கிறது; கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையம், இருக்கிறது. ஆக, தமிழ்நாட்டிலே மொத்தம் நான்குதான் இருக்கின்றன. உங்களுக்குப் பக்கத்திலேயே திருச்சியில் இருக்கிறது. திருச்சியில் தலைவர் கலைஞர் அவர்கள்தான் முதன்முதலில் அதைத் திறந்து வைத்தார்கள். அவர் திறந்து வைத்தது மட்டுமல்ல; 2021 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்தில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புத்தாக்க அறிவியல் மையம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அதைத் திறந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, திருச்சியிலே இருக்கிற அந்த மையத்தை விரிவுபடுத்துவதற்கு, மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன.*

[2022 ஏப்ரல் 20

நீங்கள் கேட்ட பிறகு, நான் காலையிலே பெரியார் கோளரங்கத்தைப் போய் பார்த்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். நிறைய மாணவர்கள் வருகிறார்கள். உண்மையிலே அது பயனுடையது. வான்வெளி பற்றி தெரிந்துகொள்வதற்கு அது மிகவும் உபயோககரமாக இருக்கிற ஒரு மையம்தான். ஆனால், இப்போது தமிழ்நாட்டில் 4 மையங்கள்தான் இருக்கின்றன. ஒரு மையம் உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குக் குறைந்தபட்சம் 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். நிலம் இருந்தால் மட்டும் போதாது; அங்கு காட்சிக்கூடம் அமைப்பதற்கு 15.20 கோடி ரூபாய் செலவாகும். பணியாளர் மற்றும் பராமரிப்புச் செலவிற்கு தொடர் செலவாக 65 இலட்சம் ரூபாய் ஆகும். அதுமட்டுமல்லாமல், 120 இருக்கைகளுடன்கூடிய ஒரு கோளரங்கத்தை அமைப்பதற்கு 15 கோடி ரூபாய் செலவாகும். ஆக, இப்போது தமிழ்நாட்டில் 4 மையங்கள் இருக்கின்றன. அதிலுங்குறிப்பாக, திருச்சிக்குப் பக்கத்திலே புதுக்கோட்டை இருக்கிறது. அங்கேயிருக்கிற மாணவர்கள் இதன்மூலம் பயனடைவதற்கு வாய்ப்பிருக்கின்றது. ஆகவே, வருங்காலங்களிலே நிதிநிலைக்கேற்ப மற்ற இடங்களிலேயும் இந்தக் கோளரங்கத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம்; அதிலும் குறிப்பாக, மாணவர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகளைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தளபதி அவர்கள் எடுத்திருக்கிற முயற்சியின் காரணமாக வருங்காலங்களிலே இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் வறுமையின் நிலையை 40 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிப் பார்த்தால், அடைந்த வேதனையைச் சொல்லி மாளாது. ஆனால், 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதி ஆயோக்கின் அறிக்கையில் வறுமை குறைந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை அடைந்துள்ளது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அதேநேரத்தில் தமிழகத்தில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் ஆய்வுகளை மேற்கொள்கிறபோது, சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு 15 அம்சங்களில் ஆய்வு

2022 ஏப்ரல் 20]

மேற்கொண்டதில், புதுக்கோட்டை மாவட்டம்தான் பட்டியலில் கடைசியாக உள்ளது. இத்தகைய நிலையை மாற்றிட, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கடைக்கண் பார்வை புதுக்கோட்டை மாவட்டத்தின்மீது விழவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்களின் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோளரங்கம் இந்த நான்கு மாவட்டங்களில்தான் இருக்கிறது என்று நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இன்னும் கேட்டீர்களென்றால், எங்கள் மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்தில்கூட அதை அமைக்க வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இருக்கிறது; ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும் இருக்கிறது. இருந்தாலும்கூட, இந்தக் கோளரங்கத்தில் பயிலுகின்ற மாணவர்கள் எல்லாம் Astronomy படித்தவர்கள்; வானவியல் படிக்கிற மாணவர்கள்; அதைப்போன்று Astrophysics படிப்பைப் படிக்கின்ற மாணவர்களும் இருக்கின்றனர். Meteorology படிக்கின்ற மாணவர்களும் இதன்மூலம் நிறைய பயனடைகின்றனர். பள்ளிக்கூட மாணவர்கள், சிறிய வயதிலிருந்து அங்கே சென்று இன்னும் பயன்பெறுவதற்கும் வாய்ப்பாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பொதுமக்களும் அங்கே செல்கின்ற வாய்ப்புகளெல்லாம் இருக்கின்றன. இவற்றிற்காக அந்தக் கோளரங்கத்தை அமைக்க வேண்டும் என்பது அவசியமாகிறது. ஆகவே, இனிவருகின்ற காலங்களிலே நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, நிதிநிலைக்கேற்ப இதற்கான பரிசீலனையை இந்த அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், எப்படியும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்; மாணவர்களுடைய அறிவுத் திறனை மேம்படுத்திட வேண்டும் என்கின்ற அடிப்படையில் இவற்றையெல்லாம் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளை வருங்காலங்களிலே அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

[2022 ஏப்ரல் 20

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 4 கோளரங்கங்கள் இருப்பதாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மிகுந்த மகிழ்ச்சி. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே மதுரையில் நடைபெற்ற உயர் கல்வி, பள்ளி மாணவர்களின் தொழிற்கல்வி மாநாட்டிலே மதுரையிலே ஒரு கோளரங்கம் அமைக்கப்பட வேண்டுமென்ற செய்தியைச் சொல்லி, அதற்கான பூர்வாங்க செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டன. குறிப்பாக, அருமை அண்ணன் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரைக்கும், தென் மாவட்டங்களுக்கே எந்தக் கோளரங்கமும் இல்லை என்பது வியப்பாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரையில் ஒரு கோளரங்கம் அமைப்பதற்கான வழிவகையை உருவாக்கிட ஆவன செய்ய வேண்டுகிறேன். நீங்கள் சொல்கிற தேவையான இடமும், அதற்கான நிதியும் மிக எளிமையானது என்று கருதுகிறேன். ஆகவே, அன்புகூர்ந்து மதுரையிலே உடனடியாக ஒரு கோளரங்கம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். அதுவும், தென் மாவட்டங்களுக்கென்று அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கண்டிப்பாக அங்கே தேவைதான். ஆகவே, வருங்காலங்களிலே, மறுபடியும் ஒரு கோளரங்கம் உருவாக்குவதாக இருந்தால், first preference மதுரைக்குக் கொடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி பாப்பிரெட்டிப்பட்டியிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை அதிகமாக

2022 ஏப்ரல் 20]

இருக்கிறது. ஆனால், வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினால், கூடுதல் கட்டடம் வழங்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்வி கோளரங்கம் குறித்தது. துணைக் கேள்வியைக் கேட்டால், விவரமாக கேட்க வேண்டாமா! மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரக்கோணம் அரசு கலைக் கல்லூரியில் 1,500 மாணவ மாணவியர் படிக்கின்றனர். அங்கே வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருப்பதால் இரண்டு* shift*-களாக அந்தக் கல்லூரி நடைபெறுகின்றது. ஒரே* shift *ஆக அந்தக் கல்லூரி நடைபெற வேண்டும். 25 வகுப்பறைகள் கூடுதலாகத் தேவைப்படுகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, திரு. ஆ. கோவிந்தசாமி அவர்களுக்குச் சொன்ன பதில்தான், உங்களுக்கும். கோளரங்கம் அமைக்கப்பட வேண்டுமென்று கேளுங்கள். கோளாறான கேள்வியெல்லாம் கேட்கிறீர்கள், உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. *மணிக்கண்ணன், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***3052—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*